மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

அசல் வழக்கு எண். 67/2022

நாள்: 07.06.2024

Deposition of Witness P.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சீதாலெட்சுமி | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் 3 ம் வாதி ஆவேன். மற்ற வாதிகளுக்காகவும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். எனது சாட்சியத்தை நான் நிரூபண பிரமாண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். 10.08.1971 ல் எனது தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரம் சார்பதிவாளர் நகல் **வா.சா.ஆ.1.** 24.02.2009 ல் 1ம் பிரதிவாதியின் பெயரில் என் தாயார் வீரமாள் எழுதி வைத்த செட்டில் மெண்ட் பத்திரத்தின் சார் பதிவாளர் நகல் **வா.சா.ஆ.2.** 05.03.2020 ம் தேதி 1ம் பிரதிவாதி 3 ம் பிரதிவதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் **வா.சா.ஆ.3.** 29.12.2008 ல் வழங்கப்பட்ட எனது தகப்பனாரின் இறப்பு சான்று நகல் தாக்கல் செய்கிறேன். 22.07.2009 ல் வேதாரண்யம் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வாரிசு சான்று உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் **வா.சா.ஆ.4.** 14.06.2022 வேதாரண்யம் சார் பதிவாளரால் வழங்கப்பட்ட எனது தாயாரின் இறப்பு சான்று சான்றிட்ட நகலை **வா.சா.ஆ.5**. 17.07.2009 நாலுவேதபதி கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சிட்ட நகல் **வா.சா.ஆ.6.** 17.07.2009 வெள்ளப்பள்ளம் கிராம நிர்வாக அலுவலரால் வெள்ளப்பள்ளம் கிராமாத்தில் உள்ள சிட்டா உண்மை நகல் **வா.சா.ஆ.7.** 22.07.2009 தலைஞாயிறு முதல் சேத்தி கிராமத்தில் உள்ள சொத்திற்கான சிட்ட உண்மை நகல் **வா.சா.ஆ.8.** எங்களது ஆதார் அட்டையின்(3 எண்ணிக்கை) ஜெராக்ஸ் தாக்கல் செய்கிறேன். தாவாப்படி தீர்பாக வேண்டுகிறேன்.